## செய்தி வெளியீடு

**றூஷ்வலி சுகாதார சபை ஏற்றுக்கொண்ட புதிய உபவிதிகளைத் தொடர்ந்து வைத்தியசாலைகளின் இணைவு ஒரு படி முன்னேற்றம் கண்டுள்ளது.**

***இணைவதற்கான சபையின் இறுதி அங்கீகாரம் அரசின் புதிய முதலீட்டு அர்ப்பணிப்பில் தங்கியுள்ளது.***

**மார்ச் 4, 2014** - றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பின்(RVHS) இயக்குநர் சபை சில புதிய உபவிதிகளை அங்கீகரித்துள்ளது. ஸ்காபரோ வைத்தியசாலையுடன்(TSH) இணையும் திட்டம் தொடரும்பட்சத்தில் அந்த உப விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

RVHS சபையின் அங்கீகாரமானது இரு வைத்தியசாலைகளினதும் இணைப்புத் தொடர்பாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் மிகப் பிற்பட்ட முயற்சியாகும். அது வைத்தியசாலைகளுக்குக் கிடைக்கவுள்ள புதிய முதலீட்டில் தங்கியுள்ளதுடன் இறுதியில் சுகாதாரம் மற்றும் நெடுங்காலப் பராமரிப்பு அமைச்சரின் அங்கீகாரத்துக்கும் உட்பட்டது.

திங்கட்கிழமைக் கூட்டத்தில் RVHS இயக்குநர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற ஆவணங்களில், இணையும் உடன்பாட்டுப் பத்திரம், உரிமைக் கடிதங்கள், நிருவாக உபவிதிகள், தொழில் உத்தியோகர் உப விதிகள் உட்படப் புதிதாக இணையவுள்ள வைத்தியசாலைகளின் கூட்டுத்தாபனத் துக்கு வேண்டிய பல முக்கிமான விடயங்கள் அடங்கியிருந்தன.

RVHS சபை ஆவணங்களை அங்கீகரித்து, வைத்தியசாலைகள் இணைவதைப் பின்வரும் நிபந்தனைகளின் பேரில் தொடர ஒத்துக்கொண்டது:

- முதலீட்டுத் திட்டத்துக்கு அரச ஆதரவு
- முதற்தடைவை மட்டுமன்றி இணைப்புத் தொடர்பாக தொடர்ச்சியாக ஏற்படக்கூடிய செலவுகளுக்கும் உதவுவதுடன்
- வழக்கமான நிருவாக விடயங்களுக்கும் அரசு உதவுதல்.

‘‘வைத்தியசாலைகளின் இணைப்புத் தொடர்பாகப் பல படிநிலைகளில் முன்னேறிக் கொண்டிருக்கும் நாம் TSH பங்காளருடன் கலந்து ஆலோசித்துத் தொடர்ந்தும் பணியாற்றுவோம். இதன் அடுத்த படியாக

இம்மாதம் நடைபெறவுள்ள RVHS இன் உறுப்பினர் கூட்டத்தை நாம் எதிர்பாத்துள்ளோம்'' என்று RVHS இயக்குநர் சபைத் தலைவர் Joan Wideman கூறினார். ''வைத்தியசாலைகளின் முன்மொழியப்பட்ட இணைப்பு எமது மேற்கு றூஜ் ஸ்காபரோ சமூகத்தினருக்கு மேலதிக சேவை வசதிகள், மேலான பராமரிப்பு, அளவான நிதியைக்கொண்டு அதிகமான சுகாதாரக் கவனிப்பு முதலியவற்றை வழங்குவதற்கு ஒரு முக்கிய சந்தர்ப்பத்தைத் தருகின்றது.''

RVHS, TSH ஆகிய இரண்டும் நோயாளருக்கு உயர்தரமானதும் பயனுடை யதுமான சேவைகளை வழங்கிவருவதற்கான வலுவான ஆய்வுப் பதிவுகளை வைத்திருக்கின்றது. இந்த இரண்டு வைத்தியசாலைகளும் சுகாதாரக் கவனிப்பு முறைகள் மாற்றம்பெற்றுவருகின்ற இக் காலகட்டத்தில் சிறந்த சேவைகளை வழங்குவதில் முனைப்புற்றிருக்கின்றன.

RVHS, TSH ஆகிய இரண்டும் ஒன்றாக ஒருங்கிணைந்த வைத்திய முறை ஒன்றை உருவாக்க முனைகின்றன. இம் முறையானது,

- வளர்ந்தும் முதுமையடைந்தும் வருகின்ற எமது சமூகத்துக்குச் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்;
- மருத்துவம் பெறுவதற்கு வேண்டிய உள் ஊர் தொடர்புகளை வழங்கும்;
- எமது நோயாளருக்கும் அவர்களுக்குச் சுகாதார சேவைகளைச் செய்பவர்களுக்கும் உன்னதமான அனுபவங்களை வழங்கும்;
- உள் ஊர் சுகாதார சேவைகள் இக்காலத்திலும் வருங்காலத்திலும் கிடைக்கும் வகையில் எமது வளங்களைத் திறமையுடன் பயன்படுத்தும்.

**RVHS இன் மார்ச் 17 உறுப்பினர் கூட்டம்**

RVHS, TSH வைத்தியசாலைகளின் இணைப்பின் மீது உறுப்பினர்கள் வாக்களிப்பதற்காக றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பின் விசேட உறுப்பினர் கூட்டம் ஒன்று நடாத்தப்படுகின்றது.

**திகதி**: மார்ச் 17, 2014
**நேரம்:** 6 - 8 பி.ப.
**இடம்:** றூஷ்வலி சென்ரினறி, 2867 எல்ஸ்மயர் வீதி, ஸ்காபரோ,
Dr. Bruce Johnston ஆலோசனைக் கூட்ட அறை, மூன்றாம் மாடி.

பின்வருவோர் RVHS உறுப்பினர்களில் உள்ளடங்குவர்: கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், வயது வந்த தன்னார்வத் தொண்டர்கள், மேலதிக வயது வந்த உறுப்பினர்கள், றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்புக்கு ஏப்பிரல் 1, 2012க்கும் மார்ச் 31, 2013க்கும் இடையில் 20 டாலர் அல்லது

அதற்கு மேலாக நன்கொடை அளித்தவர்கள். (கூட்டுத்தானங்கள் மற்றும் சங்கங்களாயின் 100 டாலர்.)

சந்தேகம் இருப்பின் 416-281-7342ஐ அழைத்து உங்கள் உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இந்த உறுப்பினர் கூட்டத்தின் நோக்கம் முன்வைக்கப்பட்ட தொழில் உத்தியோகத்தர் உபவிதிகளையும் நிருவாக உத்தியோகத்தர் உபவிதிகளையும் இணைப்பு உடன்பாட்டுப் பத்ததிரத்தையும் உரிமைக் கடிதங்களையும் அங்கீகரித்தலாகும். இந்த ஆவணங்களின் பிரதிகளைப் பெறுவதற்குப் பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றுக:

- RVHS வைத்தியசாலை வளாகங்கள் – றூஷ்வலி ஏஜாக்ஸ், பிக்கரிங், 580 Harwood Avenue South, Ajax; அல்லது றூஷ்வலி சென்ரினறி, 2867 Ellesmere Road,Scarborough, என்பவற்றின் நிருவாக அலுவலகத்துக்குச் செல்லுதல்.
- www.rougevalley.ca/special-meeting-of-members இல் தரவிறக்கம் செய்தல் அல்லது
- Christine Pember அவர்களை 416-281-7293 ல் அல்லது cpember@rougevalley.ca. இல் தொடர்புகொள்ளல்

**றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) — நாம் செய்வதில் அதி சிறந்தவை:**

றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.
றூஷ்வலி வைத்தியசாலை இரண்டு சமூக வைத்திய வளாகங்களான ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு டுறாமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங்கில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது. மருத்துவக் குழு, தாதியர், மற்றும் தொழில்நிபுணர் பலரும் ஒன்றாகப் பரந்த சுகாதார வலயத்து நிலைமைகளில் அக்கறை காட்டுகின்றனர். சமூக அங்கத்தவர்களுடனும் பிற வைத்தியசாலைகள், சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள், மத்திய கீழ் உள் ஊர் சுகாதார இணைவாக்க வலயம், சுகாதாரம் மற்றும் நெடுங்காலப் பராமரிப்பு அமைச்சு ஆகியவற்றுடன் ஆலோசித்தும் அவர்களைப் பங்காளிகளாகக் கொண்டும், றூஷ்வலி அதன் நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தியும் ரொறன்ரோ கிழக்கு, பிக்கரிங், ஏஜாக்ஸ், மற்றும் விற்பி ஆகிய பகுதிகளின் பெருகிவரும் சமூகங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்தும் வருகின்றது.

தொடர்பு -

David Brazeau
Director
Public Affairs, Community Relations and Telecommunications
Rouge Valley Health System
647-294-8885
dbrazeau@rougevalley.ca
www.rougevalley.ca
Facebook/Twitter/Blogspot/Flickr/YouTube
The best at what we do.